# மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை
# வட மத்திய மாகாணம் – அநுராதபுரம்

இந்த அதிகாரசபையில் தொழில்நுட்ப அதிகாரி வெற்றிடத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்காக தமது விண்ணப்பங்களை 2025.10.24 ஆம் திகதிக்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு அனுப்பும்படி அறியத்தருகிறோம்.

## தொழில்நுட்ப அதிகாரி - தரம் 03

**தரம் மற்றும் சம்பள அளவு -** தரம் 03 – 10,540 – 7x540 – 7x630 – 4x1,080 – 20x1,280 – 90,270

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

I. தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் ஒன்றில் 04 ஆண்டுகள் முழு நேர (சிவில் பொறியியல்) கற்கை (NDES)

II. தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சை (NCT) – சிவில் பொறியியல் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதுடன் 05 ஆண்டுகள் துறையில் அனுபவம்

III. உயர் தேசிய தொழில்நுட்ப (சிவில்) டிப்ளோமா (HNDT)

IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ்

V. அரச தொழில்நுட்ப அதிகாரி பரீட்சையில் (GTO) பாகம் I மற்றும் பாகம் II

VI. சிவில் பொறியியல் விடயப் பரப்புக்கு தொடர்புடைய மூன்றாம்நிலை கல்வி தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழலபயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (N.V.Q.) மற்றும் (05) ஆவது தர தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள I அல்லது II தகைமை)**

I. மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் பொருந்தும்.

II. தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சையில் (NCT) சித்தி அல்லது அரச தொழில்நுட்ப அதிகாரி பரீட்சையில் (GTO) I மற்றும் II சித்தி

அத்துடன்

மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் வேலை நிர்வாக பதவியில் குறைந்தது 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வேறு தகைமைகள் மற்றும் நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரர்களை பணியமர்த்தும் திகதிக்கு குறித்த தகைமைகளை அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- பணியமர்த்தும் திகதிக்கு 45 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும். தற்போது அரச அல்லது மாகாண அரச சேவை, அரச சார்பு நிறுவனம் ஒன்றில் (கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம்) சேவையில் உள்ளவர்கள் தொடர்பில் உச்ச வயது எல்லை பொருந்தாது.
- அரச சேவை அரச சார்பு நிறுவனங்களில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபைத் தலைவர்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்களினால் தமது சுயவிபரக் கோவை அடங்கிய விண்ணப்பத்தை தயாரித்து அனுப்பதல் வேண்டும் என்பதோடு தன்னைப் பற்றிய விபரங்களை பெற முடியுமான இருவரின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- இந்தப் பதிவி ஒப்பந்த அடிப்படையிலானது என்பதோடு ஓர் ஆண்டு காலத்திற்காகும். என்றபோதும் அதிகாரசபையின் விருப்பின் அடிப்படையில் இந்தக் காலத்தை நீடிப்பது அல்லது அவ்வாறு செய்யாது இருக்க முடியும்.
- பணியமர்த்தப்படும் பதவிகளின் எண்ணிக்கை 7 ஆகும்.
- இந்த ஒப்பந்தப் பதவிக்காக மாதாந்தம் ரூபா 61,179.00 (43,379.00 + 17,800.00) கொடுப்பனவு ஒன்றுடன் அதிகாரசபையினால் வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.
- விண்ணப்பதாருக்கு விசேட தகைமைகள் மற்றும் அவருக்கு அனுபவம் இருந்தால் அவற்றை கருத்தில் கொண்டு உயர் தரம் மற்றும் ஒரு தரத்தில் சம்பள அளவில் பொருத்தமான சம்பள அளவில் வைக்கப்படும்.
- நிரந்தர வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்போது ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சேவை தொடர்பில் செயற்றிறன் கருத்தில் கொள்ளப்படும்.

**முகவரி:**

**பொது முகாமையாளர்,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**எச்.பி. சேமசிங்ஹ மாவத்தை,**
**அநுராதபுரம்,**
**வட மத்திய மாகாணம்.**